# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 25 | திங்கட்கிழமை | 12.08.2024 | கதிர் 329







# தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புடன் கலந்துரையாடலுக்கு சஜித்தும் அழைப்பு

தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தியிருக்கும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் தனித்தனியாக சஜித் பிரேமதாஸவால் இன்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாகத் தாங்கள் கலந்துகொள்ளமாட்டோம் என்று தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இன்று மாலை தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலிலும் பொதுக் கட்டமைப்பினர் கலந்துகொள்ளாத போதும் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.



## கட்டுப்பணம் செலுத்திய அரியநேத்திரன்



ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவுள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கான கட்டுப்பணம் இன்று செலுத்தப்பட்டது.

சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரான த.சிற்பரன், பொது வேட்பாளருக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.



## மலையக அரசியல் தலைவர்களுடன் சஜித் புரிந்துணர்வு உடன்படிக்கை

பெருந்தோட்ட மக்களை வலுவூட்டும் நோக்கில் பெருந்தோட்ட அரசியல் கட்சித் தலைவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று திங்கட்கிழமை புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், பழனி திகாம்பரம் மற்றும் எம்.உதயகுமார உள்ளிட்ட தோட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கையொப்பமிட்டனர்.

## யாழ். ரயிலில் டீசல் திருடிய கும்பல் குறித்து விசாரணை




யாழ்ப்பாணம்–காங்கேசன்துறையில் ரயிலில் தொடர்ச்சியாக டீசல் திருடிய கும்பல் குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் இரவு வேளையில் ரயில் தரித்து நின்றபோது கடந்த 9ஆம் திகதி இனந்தெரியாத குழுவொன்று திருட்டில் ஈடுபட்ட சமயம், ரயில் நிலையத்தில் கண்காணிப்பில் ஈடுபட்ட அதிகாரிகளால் இந்தச் சம்பவம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

இதன்போது திருட்டில் ஈடுபட்ட கும்பல் தப்பிச் சென்ற நிலையில் நான்கு 20 லீற்றர் கொள்கலன்களில் டீசல் நிரப்பப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

ரயில் எரிபொருள் தாங்கியின் திறப்புக்கள் அனுராதபுரத்திலேயே இருக்கின்றன என்று கூறப்படும் நிலையில் குறித்த திருட்டுக்கு ரயில் நிலைய ஊழியர்களும் உடந்தையாகச் செயற்பட்டார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தொடர்ச்சியாக எரிபொருள் தாங்கியில் இருந்து எரிபொருள் திருடப்பட்டு வந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸார், ரயில் திணைக்களத்தினர் தனித்தனியே விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சீனத் தூதுவருடன் சுமந்திரன் பேச்சு



இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரனும், இரா.சாணக்கியனும் இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்கொங்கை இன்று சந்தித்து கலந்துரையாடினர்.

சீனத் தூதுவரின் அழைப்பின் பேரில் கொழும்பிலுள்ள சீனத் தூதராலயத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தற்போதைய முக்கிய நிகழ்வுகள் சம்பந்தமாகவும் வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் சம்பந்தமாகவும் சினேகபூர்வமாக கலந்துரையாடினோம் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

# ரூபா 1700 வழங்க சம்பள நிர்ணய சபையில் முடிவு

## இ.தொ.கா. நன்றி தெரிவிப்பு

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள உயர்வு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்த நிலையில், இன்று சம்பள நிர்ணய சபையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இறுதித் தீர்வு எட்டப்பட்டுள்ளது. வாக்கெடுப்பு மூலமாக 1700 ரூபா சம்பளம் வழங்கத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

சம்பள நிர்ணய சபை இன்று கூடியபோதே இது தொடர்பில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பின்போது சம்பள உயர்வுக்கு ஆதரவாக 14 வாக்குகள் அளிக்கப்பட்டன. எதிராக மூன்று பெருந்தோட்ட நிறுவனங்கள் வாக்களித்துள்ளன.

இதன்படி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாவும், வருகை ஊக்குவிப்பு விசேட கொடுப்பனவாக 350 ஷரூபாவும் வழங்க இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பள உயர்வு விவகாரம் உயர்நீதிமன்றத்துக்கு எடுத்து செல்லப்பட்ட நிலையில், நீதிமன்றத்தால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் உள்வாங்கப்பட்டு, 1700 ரூபா சம்பளம் உயர்வைப் பெற்றுத்தர முழு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ஷரூபா சம்பளத்தை முன்மொழிந்தது போல் அதனை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் முழுப்பொறுப்பும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸூக்கு உள்ளது என்றும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

1700 ரூபா சம்பளம் கிடைக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

# நாகபட்டினம் – காங்கேசன்துறை கப்பல் சேவை வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பமாகின்றது

## இன்று நள்ளிரவு முதல் பயணத்துக்கு முற்பதிவு செய்ய முடியும்



நாகபட்டினம் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை வரையிலான கப்பல்போக்குவரத்து வரும் 16-ம் தேதி முதல் கப்பல் போக்குவரத்து தொடங்க இருப்பதாக தனியார் கப்பல் போக்குவரத்து நிர்வாகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகம் வரையிலான கப்பல் போக்குவரத்தை கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் தேதி காணொலி காட்சி மூலம் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். ஆனால், புயல் மற்றும் வடகிழக்கு பருவமழை, குறைந்த அளவிலான பயணிகள் வருகை ஆகியவற்றைக் காரணம் காட்டி சேவை தொடங்கிய சில நாட்களிலேயே கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், மீண்டும் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்க இருப்பதாக தனியார் கப்பல் நிறுவனம் அறிவித்தது. அதற்காக அந்தமானில் இருந்து சிவகங்கை என்ற பெயரிலான கப்பல் கடந்த வாரம் நாகை துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அதைத் தொடர்ந்து இலங்கைக்கு சோதனை ஓட்டம் கடந்த சில நாட்களாக நடைபெற்று வந்தது. அது வெற்றிகரமாக முடிவடைந்த நிலையில், வரும் 16-ம் தேதி முதல் நாகையில் இருந்து இலங்கை காங்கேசன்துறைமுகத்திற்கு கப்பல் போக்குவரத்து தொடங்க இருப்பதாக கப்பல் நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

மேலும், இக்கப்பலில் பயணிக்க விரும்புகிறவர்கள் ளயடைனைளசை.உழஅ என்ற அதிகாரபூர்வ இணையதளம் மூலம் இன்று நள்ளிரவு முதல் டிக்கெட் முன்பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தொடங்கப்பட்டு தொடங்கிய வேகத்திலேயே சேவை நிறுத்தப்பட்டதால் அதிருப்தியில் இருந்த சுற்றுலா பயணிகள், மீண்டும் கப்பல் சேவை தொடங்க இருப்பதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# வேட்புமனுவில் கையொப்பமிட்டார் அநுர



எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக இன்று திங்கட்கிழமை முற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க வேட்பாளர் வேட்புமனுவில் கையொப்பமிட்டார்.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் வைத்தியர் நிஹால் அபேசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# நீதி அமைச்சராகவும் பதவியேற்றார் சப்ரி



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷவின் இராஜிநாமாவை அடுத்து ஜனாதிபதியால் இந்த பதவிப் பிரமாணம் வழங்கப்பட்டுள்ளது.

# சிகிச்சைக்குச் சென்ற என்னை அச்சுறுத்தினர்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சென்ற தன்னை வைத்தியசாலை பணிப்பாளர், சட்ட மருத்துவ அதிகாரி, வைத்தியசாலை பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட சிலர் அச்சுறுத்தியதாக பாதிக்கப்பட்டவர் பொலிஸாரிடம் முறையிட்டார். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பிலான முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாதிப்பட்டவரான தம்பி ஐயா கிருஷ்ணானந்த் யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தபோது இதனை தெரிவித்தார். அத்துடன் ஜனாதிபதி செயலகம், சுகா தார திணைக்களம், பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளும் குறித்த விடயம் தொடர்பில் பதிவுத் தபாலில் மகஜரை கையளித்ததாக தெரிவித்தார்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சமநிலையில் நிறைவடைந்தத போட்டி





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை 40 வயதுக்கு மேற்பட்ட உதைபந்தாட்ட அணைக்கும் அக்கரைப்பற்று 40 வயதுக்கு மேற்பட்ட உதைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான சினேக பூர்வ போட்டி ஒன்று மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் பாதி வேளை நிறைவடையும் வரை இரு அணிகளும் எதுவித கோளும் போடாமல் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. இடைவேளை நேரம் முடிவடைந்த பின்னர் போட்டி ஆரம்பிக்கப்பட்டு 15 நிமிடங்கள் தாண்டிய போது அக்கரைப்பற்று அணி மருதமுனை அணிக்கு எதிராக தமது முதலாவது கோளினை புகுத்த ஐந்து நிமிடங்களின் பின்னர் மருதமுனை அணி அக்கரைப்பற்று அணிக்கு எதிராக ஒரு கோளினை புகுத்தியது. இறுதியில் 01:01 என்ற கோல் சமநிலையில் போட்டி நிறைவடைந்தது.

போட்டியின் வீரர்கள் அறிமுக நிகழ்வின் போது மருதமுனை ஆபிதா ஹேண்ட்லூம் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் இஸட். என்.சுஹைப் ளூமி பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீரர்களுக்கு கைலாகு கொடுத்து வாழ்த்தினார்.

மருதமுனை 40 வயதுக்கு மேற்பட்ட அணியினர் போட்டியில் கலந்து கொண்ட பிரதம அதி ஏனைய ஆதரவாளர்கள், உதைபந்தாட்ட ரசிகர்கள், விளையாட்டு வீரர்கள், நடுவர்கள் என அனைவருக்கும் தமது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

# பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான தராதர பத்திரம் வழங்கும் நிகழ்வு



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயின்று வெற்றிகரமாக கற்கை நெறியை பூர்த்தி செய்த 237 ஆசிரியர்களுக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை இரண்டு அமர்வுகளாக கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் மத்திய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் தி. யோன் குயின்ரஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்

முன்னாள் அதிபர்களான வே. கா கணபதிப்பிள்ளை வீ. கருணலிங்கம் , யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்




# தேசிய மனக் கணித போட்டியில் ஒலுவிலிருந்து ஐந்து பேர் தெரிவு



(எம் எப். நவாஸ்)

UCMAS தேசிய மனக்கணித போட்டி நிகழ்வானது அண்மையில் சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இப்போட்டியிற்கு நாடு பூராகவும் 3000 போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

இப்போட்டியில் ஒலுவில் சார்பாக பங்குபற்றிய 07 மாணவர்களில் 05 மாணவர்கள் வெற்றி வாகை சூடிக் கொண்டனர்.

இதில் ஒலுவில் மற்றும் அக்கறைப்பற்று நிலைய மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இப்போட்டி நிகழ்வுக்கு பிராந்திய முகாமையாளர் என் ஜீ. நுபைல் அகமட் மற்றும் பயிற்றுவிப்பாளர் ரீ எம். பவாஸ் ஆகியோர் மாணவர்களை நெறிப்படுத்தினர்.

மேலும் டிசம்பர் மாதம் இந்தியாவில் நடைபெற இருக்கும் சர்வதேச போட்டிக்கான தயார்படுத்தல்கள் இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# 100 மொட்டு எம்.பி.க்களை இணைத்து புதிய கட்சி அடுத்த வாரம் உதயமாகும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஒன்றிணைந்துள்ள பொது ஜன பெரமுன அணி அடுத்த வாரத்தில் புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற முன்னாள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மன்றத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள 100 க்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் இணைந்து புதிய கூட்டணியொன்றின் மூலம் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தமது கட்சி சார்பாக ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்கும் தீர்மானத்தால் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்தனர். இதனால் கட்சியின் அமைப்பாளர் பதவிகளிலிருந்து அவர்கள் அனைவரையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுயேச்சையாக போட்டியிடும் நிலையில் தமக்கு ஆதரவு வழங்கும் பொதுஜன பெரமுன வேட்பாளர்களுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் மொட்டு கட்சியில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்குமாறு கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு வழங்குவதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கடுமையான நிலைப்பாட்டை பின்பற்றும் என்பதால் புதிய கூட்டணியொன்றை அமைப்பதற்காக இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலிலும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக பிரசாரங்களில் ஈடுபடுவதற்கு முன்பாக புதிய கூட்டணியை அமைத்து, உடன்படிக்கையொன்றுக்கு செல்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# வேட்புமனு தாக்கல் செய்யும் தினத்தன்று கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறை

## 4,500 பொலிஸார் களத்தில் இறக்கப்படுவார்கள்



ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் தினமான 15ஆம் திகதி வியாழன் அன்று தேர்தல் ஆணைக்குழு அலுவலகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ட்ரோன் கமராக்கள், ஸ்னைப்பர்கள் மற்றும் 4,500 க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விரிவான பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க மற்றும் விசேட அதிரடிப் படையின் கட்டளைத் தளபதி வருண ஜயசுந்தர ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாதுகாப்புத் திட்டங்களில் வேட்பாளர்கள், அவர்களுடன் வருபவர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் மீது கவனம் செலுத்தப்படும் என்று தேர்தல் ஆணைக் குழுத் தலைவர் ரத்நாயக்க கூறினார்.

விசேட அதிரடிப் படையினர் தேர்தல் ஆணைக்குழு அலுவலகம் கட்டிடத்திற்குள்ளும் அதன் அருகாமையிலும் பாதுகாப்பிற்கு பொறுப்பாக நிறுத்தப்படுவர். வேட்புமனுக்கள் காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை 30 நிமிட ஆட்சேபனை நேரத்துடன் 11.30 மணி வரை பெறப்படும், வெள்ளிக்கிழமை வரை 27 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்,

ஆனால் புதன்கிழமை வரை கட்டுப்பணம் பெறப்படும் என்பதால் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேட்பாளர்களுடன் சட்டத்தரணி உட்பட இருவர் மாத்திரமே வேட்புமனு மண்டபத்திற்குள் செல்ல முடியும் எனவும் ரத்நாயக்க தெரிவித்தார்.



# கிளிநொச்சி வலைப்பந்தாட்டப் போட்டியில் புனித திரேசா பெண்கள் கல்லூரி முதலிடம்

கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடாத்திய 16வயதுக்குற்பட்ட பாடசாலை மாணவர்ளுக்கிடையிலான அமரர் இ.விக்கினேஸ்வரமூர்த்தி ஞாபகர்த்த வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் நேற்று மாலை நடைபெற்றது.

மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் உபதலைவர் சந்தனம் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன், சிறப்பு விருந்தினராக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.மோகனதாஸ், யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, கௌரவ விருந்தினராக கரைச்சி மற்றும் பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த இறுதிப்போட்டியில் கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயம் மற்றும் புனித சென்திரேசா பெண்கள் கல்லூரி என்பன மோதிக்கொண்டன.

22:18 என்ற கணக்கில் புனித திரேசா பெண்கள் கல்லூரி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தை வீழ்த்தி முதல் இடத்தைப்பெற்றுக்கொண்டது. மூன்றாவது இடத்தை முட்கொம்பன் மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது



# வினோத உடைப் போட்டி

ஊரெழு கலைவாணி முன்பள்ளி விளையாட்டு விழாவின் போது, வினோத உடைப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுடன் விருந்தினர்கள்.





# காரைதீவில் கல்விச் சாதனையாளர்கள் 100 பேர் பாராட்டிக் கௌரவிப்பு

(காரைதீவு நிருபர்)

காரைதீவில் கல்விச் சாதனையாளர்கள் 100 பேர் தங்கப்பதக்கம் அணிவித்து, பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இக் கௌரவிப்பு விழா, சித்தருள்சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குருபூஜையும், அன்னதானமும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பிறகு, அன்று மாலை ஆலய பரிபாலன சபை தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் சித்தானைக்குட்டி கலையரங்கில் நடைபெற்றது. சிறப்புரையை சிரேஸ்ட ஊடகவியலாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா வழங்கினார்.

இவ் விழாவில் கடந்த வருடம் இடம்பெற்ற தரம் 6 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், க.பொ.த.சா.தரப் பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்ற மாணவர்கள், மற்றும் உயர்தரப் பரீட்சை சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்குத்தெரிவானவர்கள்என 100 மாணவர்கள் சித்தானைக்குட்டி கலையரங்கத்தில் பகிரங்கமாக பதக்கம் அணிவித்து பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். விழாவில் அதிதிகளாக கலந்து சிறப்பித்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வவுனியா மன்னார் மாவட்ட பிரதம பொறியியலாளர் ரி. சுரேந்திரகுமார் உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட அதிபர்கள் பிரதி அதிபர்கள் எனப்பலர் கலந்து கொண்டு இப் பாராட்டினைவழங்கி வைத்தார்கள். ஆலய பரிபாலன சபை செயலாளர் இ.விஜயரெத்தினம் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோர் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

# சாய்ந்தமருது இளைஞர்களுடனான ஒன்றுகூடலும் கலந்துரையாடலும்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது இளைஞர்களுடனான ஒன்றுகூடலும் தற்கால அரசியல் நிலவரம் குறித்த கலந்துரையாடலும் முன்னாள் கல்முனை மாநகரசபை முதல்வரும் ,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரப் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் அவருடைய இல்லத்தில் இடம்பெற்றது

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரருமான ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டதோடு மற்றும் ,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக் , கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, சாய்ந்தமருது அமைப்பாளர் எம்.ஐ.எம். பிர்தௌஸ்,கல்முனை மாநகர சபை வேட்பாளர் எம்.எம்.பாமி , உச்சபீட உறுப்பினர் ஏ.சி.சமால்டீன் சாய்ந்தமருது மத்திய குழு உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

# சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு பேராதனை பூங்கா களை கட்டுகிறது



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மாத்திரம் சுமார் 30 ஆயிரத்துக்கு அதிகமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் பேராதனைப் பூங்கா, நுவரெலியா, பாசிக்குடா ,உல்லை போன்ற இடங்களுக்கு பெருமளவில் சென்று பொழுதைக்கொண்டாடி உல்லாசமாக கழித்து வருகிறார்கள் . குறிப்பாக நேற்று பேராதனைப் பூங்காவில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுடன் உள்ளூர் சுற்றுலா பயணிகளும் சரளமாக இணைந்து குதூகலமாக பொழுதைக் கழித்து வந்தார்கள். மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 91ஃ 92 புலன அணியினரும் பிரான்ஸ் இத்தாலி மற்றும் ஜேர்மன் சுற்றுலா பயணிகளுடன் இணைந்து அன்பைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த வருடத்தில் இதுவரை பன்னிரண்டு லட்சத்து 50 ஆயிரம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# பாடசாலை மாணவிகளுக்கு சுகாதார நலன்கள் தொடர்பான பரிசோதனை!



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இணைந்து கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) தரம் 06, 07 மற்றும் 10 பிரிவுகளின் உள்ள மாணவிகளுக்கு சுகாதார நலன்கள் தொடர்பான பரிசோதனைகளை கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஏ.எம்.பாறூக் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம், இந்த கல்லூரியின்பழையமாணவியும் பிரபல மனநல மருத்துவரும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரியுமான எஸ்.எப். டாக்டர் ஸஹ்ரா சரப்தீன், டாக்டர். ஏ. ஆர். எம் அஸ்மி, கல்லூரி முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ், பிரதி அதிபர் என்.டி நதீகா, பகுதித் தலைவிகள், தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



## அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளராக ஏ.எல் மஹ்ஷரூப் நியமனம்

திருக்கோணமலை மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளராக கடமையாற்றிய சம்மாந்துறையைச் சேர்ந்த ஏ.எல் மஹ்ரூப் அம்பாறை மாவட்டத்தின் பிரதான கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் உத்தியோகபூர்வமாக தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பிரதம கணக்காளர் மஹ்ஷரூப் 1999ஃ05ஃ17 இல் கணக்காய்வாளர் சேவை பரீட்சையில் சித்தியடைந்ததுடன் 2002ம் ஆண்டு 02ம் ஆண்டு 01ம் திகதி இலங்கை கணக்காளர் சேவை பரீட்சையில் சித்தியடைந்து அம்பாறை, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, கல்முனை, உகன, தகன ஆகிய பிரதேச செயலகங்களில் கணக்காளராக கடமையாற்றியதுடன் இவர் கணக்காளர் சேவையில் தரம் 1ற்கு 2012ம் ஆண்டில் இருந்து தரம் உயர்த்தப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2018ம் ஆண்டு 2ம் மாதம் 17ம் திகதி முதல் திருக்கோணமலை மாவட்ட பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஆக பல்வேறு பதவிகளிலும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.







## சித்தானைக்குட்டி சுவாமியின் குரு பூஜை



சித்தருள்சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குருபூஜையும், அன்னதானமும் காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

நேற்று காலை முதல் பஜனை கூட்டுப் பிரார்த்தனை இடம்பெற்றது. தொடர்ந்து ஆலய குரு சிவ ஸ்ரீ தியாகராஜ குருக்கள் குருபூஜையை நடாத்தினார்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர். முடிவில் பாரிய அன்னதானம் இடம்பெற்றது. ஆலய பரிபாலன சபை தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் குருபூஜை இன்று 12 ஆம் தேதி இடும்பன் பூஜையுடன் குருபூஜை நிறைவடைந்தது.




# நாட்டின் நலன் கருதி முஸ்லிம் தலைவர்கள் ரணிலை ஆதரிக்க வேண்டும்

## முஷாரப் பகிரங்க அழைப்பு



சமூகத்தினதும், நாட்டினதும் நன்மை கருதி மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாட் பதியுதீன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுன் இணைந்து கொள்ள முன்வர வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் மேற்கண்டவாறு ரிசாத் பதியுதீனுக்கு அழைப்பினை விடுத்துள்ளார்.

அந்த அழைப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நமது சமூகமும், நாடும் எதிர்பார்க்கும் நேசத்தின் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் காணப்படுகின்றார்.

விரும்பியோ, விரும்பாமலோ முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சித் தலைவரை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இவ்வாறான நிலையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஜனாதிபதியை ஆதரிக்கும் முடிவை எடுத்து அவருடன் இணைந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தைப் போல் முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒரே அணியில் இணைந்து செயற்படுவதும் சமூகத்திற்கு பெரும் பாதிப்பாகும். இதனை நாம் அனுபவத்திருக்கின்றோம். இனவாதமில்லாத ஒரு தலைவராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எல்லோராலும் மதிக்கப்படுகின்றார்.

சமூகம் பாதிக்கப்பட்டு தனிப்பட்ட நபர்கள் நன்மையடையும் தீர்மானத்தை ரிசாட் பதியுதீனும் மக்கள் காங்கிரஸ் கட்சியும் எடுக்கக் கூடாது. ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க அவர்கள் இருண்ட யுகத்தை மாற்றி நாட்டை பொருளாதார ரீதியில் வலுவான நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்.

அது மட்டுமல்ல பிராந்தியங்களின் அபிலிருத்திக்காக எதிர்கட்சி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கோடிக்கணக்கான ஷரூபாய் நிதிகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒதுக்கீடு செய்துள்ளமை மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு நாட்டை மீட்ட தலைவருக்கு ஆதரவளிக்க வேண்டியது நமது கடமையாகும். காலத்தை நாம் கடக்க முடியாது. காலம் நம்மைக் கடந்து விடும். அதனால் ரிசாட் பதியுதீன் அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் தீர்மானத்தை விரைவாக எடுத்து அவருடன் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இன, மத, மொழி, கட்சி வேறுபாடுகளை கடந்து ஒரே தேசமாக நாட்டை வெற்றி கொள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக வெற்றியடையச் செய்ய எல்லோரும் களத்தில் இறங்கி பணியாற்றுவோம் என அந்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2024இல் வெளியிடப்பெற்றது.